**<u>மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம் , நாமக்கல்</u>**

M.C.O.P. No.302/2024 C/W 718/2024 and 426/2024

நாள்: 23.06.2026 மலர்கொடி க/பெ. முத்தரசு ம.சா.– 1

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

**<u>குறுக்கு விசாரணை (2ம் எதிர்மனுதாரர் தரப்பில்)</u> :–**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை, கேள்விப்பட்டுதான் தெரிந்துக்கொண்டேன். விபத்து சமயத்தில் இருச்சக்கர வாகனத்தில் 3 நபர்கள் சென்றார்கள் என்றால் 2 நபர்கள் மற்றும் 6 மாத கை குழந்தைக்கு ஊசி போடுவதற்காக சென்றார்கள். விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணிந்ததாக முதல் தகவல் அறிக்கை மற்றும் இறுதி அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை. விபத்து சமயத்தில் எனது மகன் தலைக்கவசம் அணியாமல் சென்றதுதான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மெதுவாகவும், கவனமாகவும் தான் வாகனத்தை ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்திற்கு முழுக்காரணம் எனது மகன் தான் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் விபத்திற்கு காரணமில்லை என்றால் சரியல்ல. ம.சா.ஆ.3 ல் விபத்து சமயத்தில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என சோதனை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ல் விபத்து சமயத்தில் எனது மகனுக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லை என சோதனை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது மகன் எலட்ரீசன் தொழில் செய்து வந்ததற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மனுவிற்காக எனது மகனின் வயதை குறைத்தும், வருமானத்தை மிகைப்படுத்தி ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரிடம் விபத்து தேதியில் வாகனத்தை இயக்க அனுமதித்தது மோட்டார் வாகன விதி மற்றும் பாலிசி விதி மீறிய செயலாகும் என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. திருத்தப்பட்ட மோட்டார் வாகன சட்டப்படி ஓட்டுநர் உரிமம் இல்லாத நபர் வாகனத்தை ஓட்டினால் 1ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு கிடைக்கும் பட்சத்தில் 1ம் எதிர்மனுதாரர் தான்

கொடுக்க வேண்டும் என்றும், 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில், சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற, தட்டச்சு செய்யப்பட்டு அவருக்கு படித்துக் காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை / கையெழுத்து இட்டார்.

சார்பு நீதிபதி,
முன்னிலை அலுவலர்,
மோட்டார் வாகன விபத்து கோருரிமை தீர்ப்பாயம்
நாமக்கல்.